# ஆழ்வார்கள் பாசுரங்களில் இயற்கை

# Nature in Alwars Pasurangal

***முனைவர் ந.செ.கி. சங்கீத்ராதா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை

**Dr. N.S.K. Sangeethradha**
*Assistant Professor, Department of Tamil*
*Thiyagarajar College, Madurai*

## ஆய்வுச் சுருக்கம்

*திருமாலின் திருவருளில் எப்பொழுதும் ஆழ்ந்து இருப்பவர்கள் ஆழ்வார்கள். திருமாலை அன்றி வேறு தெய்வமறியாதவர்கள். மறந்தும் புறந்தொழா மாந்தர்கள் எனப் போற்றப்படுபவர்கள். ஆழ்வார்கள் அருளிச் செய்தவை தென்மொழிமறை எனப் போற்றப்படும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஆகும். ஆழ்வார்கள் தமது இதன்தமிழ்ப் பாசுரங்கள் வாயிலாகசமயத்தை மட்டுமன்றுதமிழையும் சேர்த்தே வளர்த்தனர். வைணவத்தின் ஆணிவேர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் இவ்வுலகில் காண்கின்ற பொருள்கள் அனைத்திலும் இறைவடிவத்தையே காண்கின்றனர். பொருள்கள் மட்டுமன்று இயற்கை அனைத்தையும் இறையாகக் காண்கின்ற அருளாளர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் இயற்கையை எங்ஙனம்காட்சிப்படுத்துகின்றனர்என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச்சொற்கள்:*** *ஐம்பூதங்கள், வையம் விளக்கு, இயற்கையே இறைவடிவம், மலர்களில் மாயவன், வேங்கடமலை விலங்குகள், செடி-கொடி-மரங்கள்.*

## Abstract

*Prominent God for Vainavas were Thirumal. The roots of Vaishnavism are the Alwars. Alwars who are always deep in the glory of Tirumal will be absorbed. Tirumala, alwars won't worship other gods, other than thirumal. What the Alwars have blessed is Nalaira Divya Prabandham' which is praised as "Then mozhi marai'. The Alwars have not only developed the Vainava Samayam but also Tamil language through their Tamil Pasurangal. The roots of Vaishnavism are the Alwars. The things that the Alwars see in this world. They see the divine form in everything is what they saw in this world. The purpose of this article is to study how the Alwars visualize Nature in their Pasurangal.*

***Keywords:*** *Imboothangal, Vaiyam Vilaku, Iarkaiyae Iraivadivam, Malakalil Mayavan, Venkatamalai Vilangugal, Sedi & kodi & Marangal.*

**Citation**

Sangeethradha, N.S.K. "Nature in Alwars Pasurangal." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 87–94.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096743*

**முன்னுரை**

*பாரதம் முழுவதும் பக்திநெறி பரவிக் கிடப்பினும் அதன் வேர்கள் தென்னகத்தில்தான் ஊன்றிக்கிடந்தன. தனியொரு மனிதன் பக்தியோடு இறைவனை வணங்கும் நிலை பக்தி நெறியாகும்.அது இறைவனை ஒரு குழுவினரோ சமுதாயமோ வழிபட்டால், பின்பற்றி நடந்தால் அது சமயமாக மாறும்.எத்தகையோரும் இறைவழிபாட்டால் சிறப்புப் பெறலாம் என்னும் கருத்தினை பக்தி இயக்கம் எடுத்தியம்பியது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமய நாயன்மார்களும், திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட வைணவ சமய ஆழ்வார்களும் இசையோடும் தமிழோடும் இறைப் பக்தியைப் போட்டியிட்டுக் கொண்டு வளர்த்தனர். திருமாலின் திருவருளில் முப்பொழுதும் மூழ்கி இருப்பவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் திருமாலைப் போற்றிப் பாடிய இன்தமிழ்ப் பாசுரங்களே நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் எனப்படும். ஆழ்வார்களின் பாசுரங்களில் இயற்கை எங்ஙனம் காட்சிப்படுத்தப்படுகிறது என்பதை விரித்துரைப்பதே இக்கட்டுரையின் மையமாகும்.*

**ஐம்பூதங்கள் வழிபாடு**

*தன்னலம் கருதாது இறைவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுத் தொழுவதே பக்தியாகும். இறைவனின் மீது ஏற்பட்ட அளவற்ற அன்பின் பிரதிபலிப்பே பக்தி ஆகும்.இப்பக்தியினை அருளாளர்கள் பல வழிகளில் வெளிப்படுத்துவர். அதனைப் பக்தி நெறிமுறைகள் என்று கூறலாம். பக்தி இயக்கம் என்பது இந்து சமயத்தின் மறுமலர்ச்சியே. இந்து சமயத்தின் பெருமினை வெளிக்காட்டுவதற்கும், திருமால், சிவன் ஆகியோரின் புகழைப் பரப்புவதற்காகவும் இந்து சமயம் மறுமலர்ச்சியடைந்தது(அ.ச.ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, (ப.35) ஆழ்வார்களுள் தலையானவராகக் கருதப்படும் நம்மாழ்வார் உயர்வற உயர்நலம் உடையவன் இறைவன் எனப் போற்றுகிறார். ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றை திருமாலின் வடிவங்களாகவே காண்கின்றார்.*

***பாரு நீ வானு நீ காலு நீ தீய நீ***
***நீரும் நீயாய் நின்ற நீ***
***கண்ணுள்ளே------***
***மண்ணும் நீரும் எரியும் நல்வாயுவம்***
***விண்ணுமாய் விரியும் எம்பிரானையே (திரு.மொழி.5-4-6)***

*என்று மண், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் யாவும் இறைவனே என்று நம்மாழ்வார் கூறியது அதில் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவடிவத்தையே குறிப்பதாகும். என்பதாகும். அகத்தில் இறைவன் இருந்தால்தான் புறத்திலும் தெரிவான் என்பது அருளாளர்கள் கூற்றாகும்.*

***உள்ளத்தில் உள்ளான் அடி! - அது நீ***
***உணர வேண்டும் அடி***
***உள்ளத்தில் காண்பாய் எனில் - கோவில்***
***உள்ளேயும் காண்பாய் அடி! (கவி.கவி.ப.12)***

*உள்ளத்தில் இறைவனைக் காணக் கற்றுக் கொண்டால், கோயில் உள்ளேயும் அவனைக் கண்டுகொள்ளலாம் என்ற மிக முற்போக்கான ஆன்மிகச் சிந்தனையை கவிமணி ஆழப் பதிவு செய்துள்ளார். இதனையே,*

***உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் (திரு.மந்.)***

*என்றார் திருமூலர். உள்ளத்தில் இறைவன் இருந்தால் காண்கின்றவற்றில் எல்லாம் அவன் தெரிவான் என்பதை பாரதியும் சுட்டிக்காட்டுகிறார்.*

***காக்கைச் சிறகினிலே நந்தலாலா - உன்னை***
***காணும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா***
***பார்க்கும் மரங்களிலெல்லாம் நந்தலாலா - உந்தன்***
***பசுமை நிறம் தோன்றுதடா நந்தலாலா (பா.கவி.ப.58)***

**வையம் விளக்கு**

*முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவலூரில் இறையருளால் சந்திக்கின்றனர். பெருமானின் பேரழகுக் காட்சி கிட்டியவுடன் விளக்கேற்றி வழிபடுவதற்கு முற்படுகிறார் பொய்கையாழ்வார். அருகில் எதுவும் கிட்டவில்லை. எதை விளக்காக ஏற்றுகிறார் தெரியுமா? உலகத்தை விளக்காகக் கொண்டு கடல்நீரை நெய்யாகக் கொண்டு கதிரோனை சுடராகக் கொண்டு விளக்கேற்றி வழிபடுகிறார்.*

***வையமே தகளியா வார்கடலே நெய்யாக***
***வெய்யகதிரோன் விளக்காகச் செய்ய சுடராழியான்***
***அடிக்கே சூட்டினேன் சொல்மாலை***
***இடராழி நீக்குக என்று (மு.திரு.1)***

*என்கிறார்.*

**இயற்கையே இறைவடிவம்**

*மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், மரம், செடி, கொடி, மலை என அனைத்தும் இயற்கையே. இயற்கை உடல்! இறை உயிர்! இறையாகிய உயிர் இயற்கையாகிய உடல் வாயிலாக உயிர்கட்கெல்லாம் நன்மை அளிக்கிறது. இயற்கைக்கும் இறைக்கும் உள்ள தொடர்பு, நமது உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது. கண்ணுக்குத் தெரியாத உயிரினைக் கண்ணுக்கு தெரிந்த உடல் வாயிலாக அறிவது போல், உடலாகிய இயற்கையைக் கொண்டு உயிராகிய இறையின் உண்மையை உணர்தல் வேண்டும். (திரு.வி.க., தமிழ்நாடும் நம்மாழ்வாரும், ப.30) உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் (திரு.மொழி.) இயற்கையைப் போற்றுவதும், இறையைப் போற்றுவதும் ஒன்றே! இயற்கையை இறைவடிவாகப் போற்றுவது தமிழர் மரபு. சங்ககால மக்கள் இயற்கையை வழிபட்டு வாழ்ந்தனர் என்பதற்கு நடுகல் வழிபாடு, மர வழிபாடு, மழைவழிபாடு சான்றாகும். மேலும், நெருப்பு, மழை, காற்று, சூரியன் போல்வன வழிபாட்டுத் தெய்வங்களாக விளங்கின. போரில் உயிர் துறந்த வீரர்களுக்குக் கல் நாட்டி அதில் பெயர், போர் குறித்த செய்திகள், விழுப்புண் பட்டு இறந்த நாள் போன்றவை பொறிக்கப்பட்டன.*

***புரைநடு கல்லி னாட்பலி யூட்டி***
***நன்னீ ராட்டி நெய்நிறைக் கொளீஇய (புறம்.323)***

*என்ற பாடல் வரிகள் நடுகல் வழிபாட்டைச் சுட்டிச்செல்கின்றன.*

**மர வழிபாடு**

*அக்கால் மக்கள் நிலக்கடவுளர்களை மட்டுமல்லாமல், அனிமிசம்என்ற நம்பிக்கை வணக்க முறையையும் கொண்டிருந்தனர். இது சுற்றுப்புறத்தில் உள்ள பொருட்களில் ஆவிகள், தெய்வங்கள் இருப்பதாக நம்பிக்கை கொண்டு வணங்கும் முறையாகும். (பதிப்புக்குழு, வாழ்வியற் களஞ்சியம், ப.870) அக்கால மக்கள் மரத்தின் கீழ் தெய்வங்கள் தங்கியிருந்தன என்று நம்பினர். ஆலமரத்தின் கீழ் சிவபெருமான் வீற்றிருப்பதாகவும், ஆலிலை மேல் திருமால் பள்ளி கொண்டிருப்பதாகவும் நம்பினர். இதனை,*

***தொன்றுறை கடவுள் சேர்ந்த***
***பராரை மன்றப் பெண்ணை (நற்.3)***
***நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து (நற்.343)***

*என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இன்றும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய மர வழிபாடு காணப்படுகின்றது. கடம்பரமரம் - முருகனுக்குரியதாகவும் வில்வம் - சிவனுக்குரியதாகவும் துளசி - திருமாலுக்குரியதாகவும் கருதப்படுகிறது.*

**குன்றே கோவிந்தன்**

*திருமால் மேல் காதல் கொண்ட பெண்ணின் மனநிலையை நம்மாழ்வார் இங்ஙனம் குறிப்பிடுகிறார். திங்களைப் பார்த்தால் திருமாலின் நினைவுதான் தோன்றுகிறது என்றும் நின்ற குன்றத்தினை நோக்கினால் நெடுமாலே தன்னை அழைப்பது போல் உள்ளது என்றும், மழை வந்தால் நாராயணனே வந்தது போல் உள்ளது என்றும் பிதற்றுகிறாள். மேலும், செந்தீயைத் தழுவி அச்சுதனென்றும், குளிர்ந்த காற்றைக் கண்டால் கோவிந்தன் என்றும் கூப்பாடு போடுகின்றாள் என்கிறார் நம்மாழ்வார்.*

***ஒன்றிய திங்களைக் காட்டி***
***ஒளிமணி வண்ணனே! என்றும்***
***நின்ற குன்றத்தினை நோக்கி,***
***நெடுமாலே வா! என்று கூவும்***
***நன்று பெய்யும் மழை காணில்,***
***நாரணன் வந்தான் என்று ஆலும் (திரு.மொழி.4-4-4)***

*அதனால்தான் பாரதியும்,*

***தீக்குள் விரலை வைத்தாள் நந்தலாலா***
***உன்னை தீண்டும் இன்பம் தோன்றுதடா (பா.கவி.ப.58)***

*என்றார்.*

**மலர்களில் மாயவன்**

*ஆழ்வார்கள் திருமாலின் திருவருளில் எப்பொழுதும் ஆழ்ந்து இருப்பவர்கள். சித்தத்தில் இருக்கின்ற உருவே செயலிலும் இருக்கும் என்பது போல, காண்பவை அனைத்தும் திருமாலின் உருவங்களாகவே நம்மாழ்வாருக்குத் தோன்றுகிறதாம். சோலைகளிலுள்ள பூவை மலரினைப் பாரக்கும்போது திருமாலின் நிறம் நினைவுக்கு வருகிறதாம். காயா மலரினைப் பார்த்தால் திருமாலின் கண்கள் நினைவுக்கு வருகிறதாம். மேலும் நீலம், காவிமலர் என்று எதைக் கண்டாலும்*

*என் உடலும் உயிரும் உவகைகொள்கின்றதே. இதெல்லாம் எம்பிரானது உருவங்களே என்ற உணர்வும் எழுகிறதே என்று நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் குறிப்பிடுகிறார்.*

***பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற***
***காவிமலர் என்றும் காண்தோறும் - பாவியேன்***
***மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும், அவ்வவை***
***எல்லாம் பிரான் உருவே என்று*** ***(பெரி.திரு.7-3-5)***

*அவனது அருளால் கிட்டும் வைகுந்தத்தை விட அவன் மீது கொண்டிருக்கும் அளப்பரிய அன்பே நாம்கிட்டும் பெரும் பேறாகும் என்கிறார் நம்மாழ்வார். மேலும் பறவைகள் பெயர்கள் அனைத்தும் திருமால் நாமங்களே! எந்தப் பறவையை அழைத்தாலும் அது திருமாலின் நாமத்தைப் போற்றுவது போல் உள்ளது என்கிறார் நம்மாழ்வார்.*

***பூவை பைங்கிளிகள் பந்து***
***தூதை பூம்புட்டில்கள் யாவையும்***
***திருமால் திருநாமங்களே*** ***(திரு.மொழி.6-7-3)***

*உள்ளத்திலிருக்கும் இறைவனை உணர்ந்தால்தான் வெளியிலிருக்கும் இறைவன் காட்சிப்படுவான்.*

***உள்ளம் பெருங்கோயில்! ஊனுடம்பு ஆலயம்!***
***வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்!*** ***(திருமந்.)***

*என்கிறார் திருமூலர். அனைத்து உயிர்களுக்குள்ளும் இறைத்தன்மை உண்டு அதை உணர்ந்து கொள்வது அரிது என்கிறார் நம்மாழ்வார்.*

***உணர்ந்து உணர்ந்து***
***இழிந்து அகன்று உயர்ந்து***
***உருவியந்த இந்நிலைமை***
***உணர்ந்து உணர்ந்து உணரிலும்***
***இறைநிலை உணர்வு அரிது, உயிர்காள்*** ***(திரு.மொழி.1-3-6)***

**வேங்கடமலை விலங்குகள்**

*திருமால் எழுந்தருளியிருக்கும் வேங்கடமலையிலுள்ள யானைகளும் திருமாலைத் துதித்து வணங்குகின்றன. யானை தன்னுடைய மதநீரால் வாயினைக் கொப்பளித்தும், அருவியில் விழும் நீரால் கால்களைக் கழுவியவாறும் தேன் துளிர்க்கும் மலர்ந்த பூக்களைத் துதிக்கையாலே தூவி வேங்கடப்பெருமானை வணங்கும் என்கிறார் ஆழ்வார்.*

***புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து அருவி***
***உகு மதத்தால் கால் கழுவிக் கையால் மிகுமதத்தேன்***
***விண்டமலர் கொண்டு விறல் வேங்கடவனையே***
***கண்டு வணங்கும் களிறு***

*என்று, திருவேங்கடத்திலிருக்கும் யானைகளும் வாய் கொப்பளித்துக் கொண்டும் கால்களைக் கழுவிக்கொண்டும் புத்தம் புதிய மலர்களை ஏந்தியவாறு திருவேங்கடமுடையானை வணங்கச் செல்லும் என்பது உரையாசிரியரின் கற்பனை நயம் மனம் கொள்ளத்தக்கதாகும்.*

***தூயமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது***
***வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க (திருப்.5)***

*என்ற ஆண்டாளின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.திருவேங்கடமலையிலுள்ள யானை ஒன்று மதம் பிடித்து மனம் போன போக்கில் சென்று கொண்டிருக்கிறது.வழியில் தன் பெடையானையைக் காண்கின்றது.கண்டவுடன் பெண்யானையை மகிழ்விக்க நினைத்து இளமூங்கிலைப் பறித்து அருகிலிருக்கும் தேன்கூட்டில் தோய்த்துப் பிடிக்கு ஊட்டிவிடுகிறது.*

***பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று***
***இடுகணிள மூங்கில் வாங்கி - அருகிருந்த***
***தேன் கலந்து நீட்டும் திருவேங்கடங் கண்டீர்***
***வான் கலந்த வண்ணர் வரை (இரண்.திரு.75)***

*என்பதில், எம்பெருமான் பிராட்டியை மகிழ்வித்து மனம் கொள்பவன் என்பதாலே, அங்குள்ள உயிர்களும்தமதுதுணையோடுமகிழ்வாகக்காணப்படுகின்றனஎன்பதையும்மேலும்திருமாலின் திருவடியிலிருக்கும் உயிர்கள் இன்பம் பயக்குமே அன்றி துன்பம் சாராது என்பதையும் ஆழ்வார் பாசுரத்தின் வாயிலாக உய்த்துணர முடிகின்றது. திருமலையிலுள்ள வானரங்களும் காலையில் எழுந்து, பூஞ்சுனைகளில் நீராடி, அன்றலர்ந்த நறுமணமிக்க பூக்களைக் கொண்டு போய் தன் இனத்திற்கேற்றாற்போல் ஏதேதோ சொல்லி துதிக்கின்றன என்கிறார் பூதத்தாழ்வார்.*

***போதறிந்து வானரங்கள் (இரண்.திரு.72)***

**செடி- கொடி-மரங்கள்**

*ஆயர்பாடியில் கண்ணனின் குழலோசைக்கு மயங்காத உயிரனங்களே கிடையாது என்கிறார் பெரியாழ்வார். திருமாலுக்கே பல்லாண்டு பாடிய பெருமகனார் பெரியாழ்வார். கண்ணன் அவதாரத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். கண்ணனின் பிறப்பு வளர்ப்பினை பெரியாழ்வார் திருமொழியில் விரித்துரைத்துள்ள பாங்கு மனம் கொள்ளத்தக்கதாகும். மற்ற ஆழ்வார்கள்போலன்றுதானேயசோதையாக மாறிகண்ணனது குறும்புகளைஅனுபவிக்கிறார். கண்ணனதுகுழலோசைகேட்டுஆயர்பாடியில்மயங்காதவர்கள்யாருமில்லை.அதுமட்டுமன்று அங்குள்ள ஆடுகள், மாடுகள், பறவைகள், விலங்குகளும் கண்ணனின் குழலோசை கேட்டு மயங்குகின்றன என்கிறார் பெரியாழ்வார்.*

***கோவிந்தன் குழல்கொடு ஊதினபோது***
***பறவையின் கணங்கள் கூடு துறந்து***
***வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்***
***கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக்***
***கவிழ்ந்து இறங்கிச் செவி ஆட்டகில்லவே (பெரி.திரு.6-9-4)***

*கண்ணனின்குழலிசையைக் கேட்டுபறவைக்கூட்டங்கள்கூடுதுறந்து படுகாடுகிடந்தன. கறவைக்கணங்கள்கால்பரப்பிக் கவிழ்ந்து இறங்கி காதுகளை ஆட்டாமல் மெய்மறந்திருந்தன.*

*மான்கள் மருட்சியோடு மேய்ச்சலின்றி நின்றன.மேய்ந்த புல்லும் கடைவாயில் இருக்க வாய் அசையாது சித்திரங்கள் போல் இருந்தன என்கிறார் பெரியாழ்வார். ஆயர்பெருமான் குழல் ஊதினபோது*

***மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்***
***மலர்கள் வீழும்! வளர்கொம்புகள் தாழும்***
***இரங்கும், கூம்பும், திருமால் நின்ற நின்ற***
***பக்கம் நோக்கி அவை செய்யும் குனமே (பெரி.திரு.6-9-5)***

**உவமை நயம்**

*பெரியாழ்வார் காணும் இடமெல்லாம் அந்த கார்முகில்வண்ணனே தென்படுகின்றான். வயல்வெளியில் நெற்கதிர்கள் நன்கு விளைந்து முற்றிச் சாய்ந்து கிடக்கின்றன.அருகிலுள்ள தாமரைப்பூக்கள் உயரமாக காட்சியளிக்கின்றன. அதனைக்கண்ட ஆழ்வார் தாமரை மலர்கள் உலகளந்த திருவடிபோல் உயர்ந்து தோன்ற, அத்திருவடிககளில் தலைசாய்த்து வணங்கும் அடியார்கள் போல நெற்பயிர்கள் விளங்கின என்கிறார். எத்துணை கவித்துவமான கற்பனை நயம்!*

***உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த***
***சேவடிபோல் உயர்ந்து காட்ட***
***வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள் சாய்த்துத்***
***தலை வணங்கும் திருவரங்கமே (பெரி.திரு.4-9-8)***

*திருவரங்கத்தில் வண்டுகள் சோலைகளில் ஒலி எழுப்புகின்றன.அவை மல்லிகைப் பூக்களின்மீது மொய்க்கின்றன. இக்காட்சியைக்கண்ட ஆழ்வார், வண்டுகள் வெண்சங்கின்மேல் வாய் வைத்து எம்பெருமான் புகழினை ஊதிப் பாடுவது போல உள்ளது என்கிறார்.*

**நிறைவுரை**

*ஆழ்வார்கள் திருமால் திருவருளால் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள்.திருமாலின் சிந்தனையில் முப்பொழுதும் மூழ்கிக்கிடப்பவர்கள்.தங்களது இன்தமிழ்ப்பாசுரங்கள் வாயிலாக வைணவத்தை மட்டுமல்லாது வளர்தமிழையும் வளம்கொழிக்கச் செய்தனர். இயற்கையைக் காணும்போதெல்லாம் இறைத்தன்மையே காண்கின்றனர். நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகிய (ஐம்பூதங்களிலும்)அனைத்திலும் எம்பெருமானே நிறைந்துள்ளான் என்றும் பாடுகின்றனர். திருமாலைக் கண்டபோதும் உலகம், கடல், சூரியன் ஆகிய இயற்கையை வைத்தே விளக்கேற்றி வழிபடுகின்றனர். இதுமட்டுமன்று மழையிலும், சூரிய ஒளியிலும், நிலவு ஒளியிலும், மலைக்குன்றுகளிலும் திருமாலின் திருவுருவத்தையே காண்கின்றனர். மேலும், திருவேங்கடமலையிலுள்ள விலங்குகள், பறவைகளின் திருமால் பக்தியினையும் அவைகள் இன்புறும் நிலையையும் எடுத்துரைக்கின்றனர். ஆயர்பாடியிலுள்ள பறவைகள், கன்றுகள், பசுக்கள் மட்டுமன்று அங்குள்ள மரம், செடி, கொடிகளும் கண்ணனின் குழலோசைக்கு மயங்கியநிலையை ஆழ்வார் புலப்படுத்தும்தன்மை சிறப்பானதாகும். இயல்பாக விளைந்து முற்றித் தலைசாய்த்திருக்கும் நெற்கதிரினைஅடியவர்களுக்கும் அருகிலுள்ளதாமரைமலரினை திருமாலின்திருவடிக்கும் உவமித்திருப்பது மனம்கொள்ளத்தக்கதாகும். இங்ஙனம் இயற்கையின் வாயிலாக இறைத்தன்மை மிளிர்வதை ஆழ்வார்கள் பாசுரங்கள் வழி அறியமுடிகின்றது.*

**துணை நின்ற நூல்கள்**


1. *அருணாசலம், ப., 2002, வைணவ சமயம், முல்லை நிலையம், தி.நகர், சென்னை - 600 017.*
2. *கலியாணசுந்தரனார், திரு.வி., 1969, தமிழ்நாடும் நம்மாழ்வாரும், அரசி புக் டிப்போ, மயிலாப்புர், சென்னை- 600 004.*
3. *சீனிவாசன், ம.பெ., 2007, முதலாழ்வார்கள், சாகித்திய அகாதெமி, புது தில்லி-110 001.*
4. *திருவேங்கட இராமானுஜதாசன்,த.,2010, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், உமா பதிப்பகம், சென்னை -600 001.*
5. *ரமா, தி., 2006, ஆழ்வார்களின் வழிபாட்டு மரபு, தியாகராஜ பதிப்பகம், காரைக்குடி - 630 002.*
6. *வேங்கடராமன், சு., 2007, தமிழர் சமய மரபுகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 625 001.*


**References**


1. *Arunachalam, P., 2002, Vaishnava Samayam, Mullai Nilayam, T.Nagar, Chennai – 600 017.*
2. *Kalyanasundaranar, Thiru.Ve. 1969, Tamil Nadum Nammalvarum, Arasi Book Depot, Mylapore, Chennai - 600 004.*
3. *Srinivasan, M.P., 2007, Mudhalwargal, Sahitya Akademi, New Delhi-110 001.*
4. *Thiruvenkada Ramanujadasan, I., 2010, Naalaiyirath Divya Prabandham, Uma Publishing House, Chennai-600 001.*
5. *Ramai T., 2006, Azhwargalin Valipattu Marabu, Thyagaraja Publishing House, Karaikudi – 630 002.*
6. *Venkataraman, S., 2007, Tamilar Samaya Marabugal, Meenakshi Puthaga Nilayam, Madurai – 625 001.*